all Government loans and land revenue dues for a period of six months in the areas where the Collector is satisfied after a personal assessment that owing to failure of rains, acute conditions prevail and warrant such postponement. The Collector has also been asked to send immediately to the Government particulars of places where the grant of this concession has become necessary.

(ஆ) வட ஆற்காடு, மதுரை, கோவை, திருச்சி, இராமநாதபுரம். தஞ்சை, செங்கல்பட்டு, நெல்லை மாவட்டங்களில் பருவமழையின்மையும், அரசு கடன் வசூலை ஒற்றிவைத்தலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்.—அடுத்து, திரு. வி. கே. கோதண்டராமன், திரு. இல. பலராமன், திரு. எ. சி. நரசிம்மன், திரு. என். வரதராஜன், திரு. கே. என் குமாரசாமி, திரு. என். மருதாசலம், திரு. சி. கந்தசாமி கவுண்டர், திரு. கே. என். சாமிநாதன், திரு. கரு சீமைச்சாமி, திரு. எ. அ. சுப்பராஜூ, திரு. பி. எஸ். தனுஷ்கோடி, திரு. கொளத்தூர் கோதண்டம், திரு. என். துரைபாண்டியன், திரு. நா. சௌந்தரபாண்டியன் ஆகியோர் ஒரே பொருளைக் குறித்து மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு, சட்டப் பேரவை 41-வது விதியின்கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேரும் படிப்பதற்குப் பதிலாக, நானே இந்த அவைக்கு அதைப் படித்துவிடுகிறேன்.

"வட ஆற்காடு, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், தஞ்சாவூர், செங்கல்பட்டு, மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பருவமழை தவறியதால் மேற்படி மாவட்டங்களில் அரசாங்கக் கடன்களை ஒத்தி வைக்க வேண்டும்".

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, இம் மாநிலத்தின் சில பகுதிகளில், அதாவது, வட ஆற்காடு, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், தஞ்சாவூர், செங்கல் பட்டு, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மிகக் கொடிய வறட்சி நிலவுவதாக அரசு கருதுகிறது. இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர்களின் அறிக்கைகளின் மேல் அத்தகைய பகுதிகளில் அரசுக்குச் சேரவேண்டிய நிலுவைகளை மெதுவாக வசூலிக்கும் கொள்கையை பின்பற்றும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஏனைய மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து குறிப்பிட்ட அறிக்கை எதுவும் வரப் பெறுவிடினும், அவர்கள் பொறுப்பில் உள்ள குறிப்பிட்ட பகுதிகளில் மழையின்மை காரணமாக மிகவும் மோசமான வறட்சி நிலை இருப்பதாகத் தாங்கள் சரிவர அறிந்த பின் இதைப் போன்ற கொள்கையைப் பின்பற்றவும், ஏனைய மாவட்ட ஆட்சித் தலைவர்களை அனுமதித்து ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

அத்தகைய பகுதிகளைக் கொண்ட பட்டியல் ஒன்றை உடனடியாக அரசுக்கு அனுப்பிவைக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

(இ) வட ஆற்காடு, கோவை மாவட்டங்களில் பருவமழையின்மையும், துயர் தணிப்புப் பணிகள் துவங்க வேண்டியதன் அவசியமும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"வட ஆற்காடு, கோயம்புத்தூர் மாவட்டங்களில் பருவ மழை தவறியதால் அப்பகுதிகளில் உடனடி பஞ்ச நிவாரண வேலைகள் துவங்க வேண்டும்".